# இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 'தொழில்நுட்ப அதிகாரி' பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**சம்பள வகுதி** : MA 2-3 (முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம்)

**வெற்றிட எண்ணிக்கை - 17**

**கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள்** : கல்விப் பொது தராதரப்பத்திரம் (சாதாரணதரம்) பரீட்சையில் 04 திறமைச் சித்திகளுடன் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த. (உ.தரப்) பரீட்சையில் விஞ்ஞான பாடப் பரப்பில் சகல பாடங்களிலும் (சாதாரண பொது பரீட்சை தவிர்த்து) சித்தியடைந்து மூன்றாம் நிலை கல்விப் பாடநெறியை பயில்வதற்கு தேவையான தகுதி மட்டத்தைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

பதவியின் செயற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு. தேசிய தொழில்சார் தகைமை (NVQ) ஐந்து (5) மட்டத்தில் குறித்த பாடநெறியை அல்லது இலத்திரனியல்/ தொலைத் தொடர்பு/ மின் பொறியியல் பற்றிய தேசிய டிப்ளோமா (NDT/HNDE/ NDES/OUSL) அல்லது C&G Advancede Diploma சித்தியடைந்திருத்தல்

**வயது** : 18 இற்கும் 35 இற்கு இடையில் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு அதி கூடிய வயதெல்லை பொருந்தாது)

**சம்பள அளவு** : MA 2-3, 2025 - ரூ 52,700 - 800 x 10 - 1190x11 - 1320x10 - 1350x10 - 100,490/- (இச் சம்பள அளவு முழுமையாக செயற்படுவது 2027.01.01ம் திகதி ஆவதுடன் அதுவரை முகாமைத்துவ சேவை சுற்று நிருப இல. 01/2025இன் அட்டவணை II பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும்.

**ஏனைய கொடுப்பனவுகள்** : வாழ்க்கை செலவுக் கொடுப்பனவு ரூ. 17,800/- மற்றும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள், அதிகாரி மற்றும் குடும்ப அங்கத்தவர்களுக்கான மருத்துவ காப்புறுதி காப்பீடு

**பொது:**

இப்பதவி ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி உரிமையுடன் நிரந்தர பதவியாகும். விண்ணப்பதாரிகள் சிறந்த ஆரோக்கியத்துடன் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும். தகைமைகளுடனான விண்ணப்பதாரிகள் நேர்முகத் தேர்வின் மூலம் பயிற்சி தொழில்நுட்ப உதவியாளராக சேர்த்துக் கொள்ளப்படுவர் பயிற்சிக் காலம் 06 மாதம் ஆவதுடன் பயிற்சிச் காலத்தில் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு பயிற்சி முடிவுறும் தினம் முதல் செயற்படுமாறு தொழில் நுட்ப அதிகாரி பதவிக்கு நியமிக்கப்படுவர். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சியின் பின்னர் 05 வருட காலம் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் சேவை செய்வதாக இணங்கி நிதி பிணைமுறிக்கு பயிற்சி ஆரம்பிக்கும் வேளையில் ஒப்பமிடல் வேண்டும். அரச திணைக்களம் அல்லது கூட்டுத்தாபன சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தை நிறுவன தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

**கவனிக்கவும்:**

நேர்முகத் தேர்வு கட்டமைக்கப்பட்ட பரீட்சை ஆவதுடன் அங்கு பெற்றுக் கொள்ளும் புள்ளிகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆவணத்தில் திறமை அடிப்படையில் குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும். விண்ணப்பங்கள் 2026.08.17ம் திகதிக்கு முன்னர் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது jobs@rupavahini.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்,**
**சுதந்திர சதுக்கம், கொழும்பு -07.**
**தொ.பே. இலக்கம்: 011-2698187**
**இணையதளம்: www.rupavahini.lk**

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED